# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.132/2019

2025 –ம் ஆண்டு அக்டோபர் மாதம் 22 –ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியின் பி.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**<u>நாள் : 22.10.2025</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. செல்வகுமார் (DW–1) | வயது | : | 37/2025 |
| த/க பெயர் | : | திரு. கணேசன் | தொழில் | : | பொறியாளர் |
| முகவரி | | 54 நெம்மேலி | வட்டம் | : | மன்னார்குடி |

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1) வாதியின் தகப்பனார் சிதம்பரத்திடமிருந்து பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் மூலம் ஏதேனும் சொத்தினை பெற்றேனா என்றால் இல்லை. 1980 ம் ஆண்டு எனது தகப்பனார் தாவா சொத்தை வாய்மொழியாக வாதி அப்பாவிடமிருந்து கிரயம் பெற்றுக்கொண்டார் என்பது தான் எனது கட்சி என்றால் சரிதான். இந்நாள் வரை தாவா சொத்து குறித்து ஏதேனும் வருவாய் ஆவணங்கள் எனது பெயரிலோ அல்லது எனது அப்பா பெயரிலோ பெயர் மாற்றம் ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை.
2) தாவா சொத்தின் புல எண் 19/1 ஏ வில் மொத்த விஸ்திரணம் 28 ½ ஏர்ஸ் என்றால் சரிதான். 28 ½ ஏர்ஸில் 2 ½ ஏர்ஸ் நான் பதிவு செய்யப்பட்ட ஆவணம் மூலம் ராஜலட்சுமி என்பவரிடமிருந்து கிரயம் வாங்கினேன் என்றால் சரிதான். இந்த வழக்கானது தாவா சொத்தின் புல எண் 19/1 ஏ வில் மொத்த விஸ்திரணம் 28 ½ ஏர்ஸில் 2 ½ ஏர்ஸ்யை தவிர்த்து மத்த சொத்திற்கு தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது, மேலும் அதற்கு தான் கட்சி நடத்தி வருகிறேன் என்றால் சரிதான்.
3) வழக்கின் 26 ஏர்ஸ் விஸ்திரணத்திலோ, நான்கெல்லையிலோ எனக்கு எதுவும் ஆட்சேபணை இல்லை என்றால் சரியல்ல, நான்கெல்லையில் ஆட்சேபணை உள்ளது. என்ன ஆட்சேபணை என்றால் கிழக்கு புல எண்.19/3ஏ வில் 13.5 ஏர்ஸ், மேற்கில் எனக்கு சொந்தமான நிலம் உள்ளது. கிழக்கு புல எண்.19/3ஏ வில் 13.5 ஏர்ஸ் என்பதற்கு ஆவணமாக இந்த வழக்கில் பதிவு செய்யப்பட்ட ஆவணமாக ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை, கிஸ்தி மற்றும் சிட்டா அடங்கல் தாக்கல் செய்துள்ளேன்.
4) இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள சொத்து விபரத்தின் நான்கெல்லையில் எனக்கு எந்த வித ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான். தமிழ் எனக்கு எழுத

படிக்க தெரியும் என்றால் சரிதான். பி.சா.ஆ.4 முதல் பி.சா.ஆ–12 வரையிலான கிஸ்திகள் யார் பெயரில் உள்ளது என்றால் எனது தந்தை கணேசன் பெயரில் உள்ளது. பி.சா.ஆ.4 முதல் பி.சா.ஆ–12 வரையிலான கிஸ்திகளில் புல எண் மற்றும் விஸ்தீரணம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் பட்டா எண் குறிப்பிடப்பட்டுள்ளது, சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் குறிப்பிடவில்லை.

5) இந்த பட்டா எண்ணில் 28 ½ ஏர்ஸில் எனது தகப்பனார் கணேசன் ராஜலட்சுமியிடமிருந்து 2 ½ ஏர்ஸ் கிரயம் பெற்றதற்காக செலுத்தப்பட்ட கிஸ்து ரசீதுகளை இந்த வழக்கில் தாவா சொத்திற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 28 ½ ஏர்ஸ் விஸ்தீரணத்தை அனுபவம் செய்து வந்தேன் என்பதற்கான எந்தவித ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்ன ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் வி.ஏ.ஓ கொடுத்த சிட்டா அடங்கல் மற்றும் தாவா சொத்தின் மூல பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேன். மேற்கண்ட ஆவணங்களை இந்த வழக்கில் தற்போது குறியிடு செய்யவில்லை என்றால் சரியல்ல.

6) நாங்கள் உண்மையிலேயே கிரயம் பெற்றிருந்தால் தாவா சொத்துக்கள் எங்களது பெயரில் வருவாய் துறையில் பெயர் மாற்றம் ஏற்பட்டிருக்கும், நாங்கள் கிரயம் வாங்காததால்தான் எந்தவித ஆவணமும் எங்கள் பெயரில் வருவாய் துறையில் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. இந்த 26 ஏர்ஸ் சம்பந்தமாக வட்டாட்சியரால் வழங்கப்பட்ட பட்டா சிட்டா எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கை வாதி தாக்கல் செய்தபின்னர் தாவா சொத்துக்கள் சம்பந்தமாக நாங்கள் வாய்மொழியாக கிரயம் பெற்றதாக சொல்லப்படும் சொத்து குறித்து வாதி ஏற்படுத்திய செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்று வாதிக்கு எதிராக ஏதேனும் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

7) வாதியின் உரிமையிலும் அனுபவத்திலும் உள்ள சொத்தை இடையூறு செய்ய எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வாய்மொழியாக கிரயம் பெற்றதாக சொல்வது வழக்கிற்காக பொய்யாக செல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.10.22 17:58:39 +0530

District Munsif
Mannargudi.